# இலங்கையின் குற்றவியல் நீதி முறைமையில் பொறுப்புக்கூறுதலின் அவசியம்

ஏழு பிரசித்தமான வழக்குகள் மீதான பார்வை

**மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்**

**மார்ச் 2019**

ஆரம்பநிலையாக ஆட்சியினதும், மோதல் தீர்மானத்தினதும் பிரச்சனைகள் மீது நோக்கினைக் கொண்டுள்ள சுதந்திரமானதும், கட்சி சார்பற்றதுமான தாபனமொன்றாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (CPA) விளங்குகின்றது. பொதுசன கொள்கை விவாதத்திற்கு சிவில் சமூகத்தின் பங்களிப்பு முக்கியமானது என்ற உறுதியான நம்பிக்கையில் 1996 இல் அமைக்கப்பட்டதுடன், விமர்சிக்கப்படுவதும், மாற்று வழிகள் அடையாளங்காணப்படுவதும் அத்துடன் பரப்பப்படுவதுமான பொதுசனக் கொள்கை ஊடாக ஆராய்ச்சியினதும், ஆதரித்துவாதாடுதலினதும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கான அர்ப்பணிப்னை CPA கொண்டுள்ளது.

6/5, லெயார்ட்ஸ் வீதி, கொழும்பு 5, இலங்கை
தொலைபேசி: +9411 2081384, +94112081385, +94112081386 ∴பக்ஸ்: +9411 2081388
ஈமெயில்: info@cpalanka.org
முகநூல்: www.facebook.com/cpasl
டுவிட்டர்: @ cpasl

**நன்றி நவிலல்**

இவ் ஆய்வறிக்கையானது இன்ஷிரா ஃபாலிக், சனூரி வன்னிநாயக்க மற்றும் பவானி பொன்சேகாவினால் ஆராய்ந்து எழுதப்பட்டுள்ளது. இவ் அறிக்கையின் வரைபு மீதான கருத்துக்களை கலாநிதி. பாக்கியசோதி சரவணமுத்து, கெயாதி விக்கிரமநாயக்க மற்றும் பசன் ஜயசிங்க என்போர் வழங்கியுள்ளனர். இவ் அறிக்கையானது அமலினி டி சாய்ராவினால் வடிவூட்டப்பட்டுள்ளது.

**உள்ளடக்கம்**

அறிமுகம்........................................................................ 02

பிரசித்த வழக்குகளின் போக்கு...................................................... 04

கட்டமைப்புசார் மற்றும் சட்ட திருத்தங்களுக்கான விதந்துரைகள்............... 06

அறிமுகம்

பின்னணி

ஆட்சிக்கு வருகின்ற அரசாங்கங்கள் யுத்தத்தின்போது மற்றும் யுத்தத்தின் பின்னர் இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுக்கான விசாரணைகளை நடத்துவதாக பல்வேறுபட்ட வாக்குறுதிகளை அளித்துள்ளன. வாக்குறுதிகள் தொடர்பில் நீண்ட பட்டியலொன்று காணப்படுகின்றபோதிலும்கூட, இதுவரையில் குற்றஞ்சாட்டப்பட்ட நபர்களை கைது செய்வதற்கான, அவர்கள் மீது வழக்குத் தொடுப்பதற்கான மற்றும் அவர்களைப் பொறுப்புக்கூறச் செய்வதற்கான சட்ட நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளன. சில சட்ட நடவடிக்கைகளாவது மேற்கொள்ளப்பட்டுள்ள சில வழக்குகளினதும் விசாரணைகள் மிக நீண்ட காலத்திற்கு இழுபறி நிலையிலுள்ளதுடன், குற்றப்பதிவு மற்றும் வழக்குத்தொடுப்பிற்கான குறைந்தளவான நடவடிக்கைகளே மேற்கொள்ளப்பட்டுள்ளன. குற்றவாளிகளுக்கு எதிராக வழக்குத் தொடுப்பதற்கான இயலாமையும், விருப்பின்மையும் பொறுப்புக்கூறுதல் தொடர்பிலான முன்னேற்றத்தினைத் தடை செய்வதுடன் இறுதியாக இலங்கையில் தண்டனையிலிருந்து விடுபடுகின்ற கலாசாரம் நிலைத்திருப்பதற்கு பங்களிப்புச் செய்கின்றன.

நீதியை வழங்குவதற்கான நேர்மையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை மற்றும் தேசிய கட்டமைப்பு மீதான நம்பிக்கையின்மை என்பன அதிகரித்து வருகின்ற சர்வதேச ஈடுபாடு, விசாரணைகள் மற்றும் நடவடிக்கை தொடர்பான கோரிக்கைகளுக்கு அடிப்படையாக அமைந்துள்ளன என்பதுடன் அதன் விளைவாகவே 2015 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் 30/1 என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இத்தீர்மானமானது இலங்கையினால் முன்மொழியப்பட்ட நிலைமாறுகால நீதிக்கான குறிப்பிட்ட எண்ணிக்கையிலான உடன்பாடுகளை உறுதிப்படுத்துகின்றது. குறிப்பாக, கடந்த காலத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுக்கான பொறுப்புக்கூறலினை உறுதிப்படுத்துவதற்காக மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் மீறல்கள் தொடர்பான குற்றச்சுமத்துகைகளை விசாரணை செய்வதற்காக விசேட வழக்குரைஞருடனான விசேட நீதிமன்றமொன்றை ஸ்தாபித்தல் என்ற உடன்பாட்டினை மேற்கொண்டிருந்தது.[1] இவ் உடன்பாடானது 2017 ஆம் ஆண்டு 34/1 என்ற தீர்மானத்தினூடாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் மீள் உறுதிப்படுத்தப்பட்டமை வரவேற்கத்தக்கதொன்றாகும் என்பதுடன் அது அத்தியாவசியமானதுமாகும். இலங்கையில் உண்மை மற்றும் நீதிக்கான முன்னெடுப்புக்களில் சர்வதேச ஈடுபாடு காணப்படுதல் புதிதான விடயமொன்றன்று. முன்னைய அரசாங்கங்கள் பொறிமுறைகளை ஸ்தாபித்து அவற்றில் சர்வதேச அலுவலர்களை நியமித்துள்ளது. உதாரணமாக, உயர் பிரசித்தியுடைய நபர்களின் சர்வதேச சுயாதீன குழு மற்றும் ஆலோசனை சபை போன்றவை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டவை ஆகும்.[2]

[1] United Nations Human Rights Council, A/HRC/RES/30/1, (1 October 2015) available at <available at <https://documents-dds-ny.un.org/doc/UNDOC/LTD/G15/220/93/PDF/G1522093.pdf?OpenElement>

[2] For more information: Centre for Policy Alternatives, Hybrid vs. Domestic: Myths, Realities and Options for Transitional Justice in Sri Lanka, (January 2016) available at < available at, <https://www.cpalanka.org/hybrid-vs-domestic-myths-realities-and-options-for-transitional-justice-insri-lanka/>

2019 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான விவாதங்கள் முன்னெடுக்கப்படுமென்பதுடன் 30/1 மற்றும் 34/1 போன்ற தீர்மானங்களின் அமுலாக்கம் தொடர்பிலான முன்னேற்றங்கள் ஆராயப்படும். கடந்த காலங்களில் நாம் கண்டுள்ளதற்கு அமைய, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை அமர்வுகள் நெருங்குகின்றபோது உடன்பாடுகளை அமுலாக்குவது தொடர்பிலான அரசாங்கத்தின் செயற்பாடுகள் துரிதப்படுத்தப்படும் அல்லது அவ்வாறு துரிதப்படுத்தப்படுவதுபோல காண்பிக்கப்படும். 2019 ஆம் ஆண்டின் ஆரம்பத்திலிருந்து உடன்பாடுகளை நிறைவேற்றுவதில் காணப்படுகின்ற துரித முன்னேற்றங்கள் இப்போக்கு இம்முறையும் கடைபிடிக்கப்பட்டுள்ளது என்பதனை தெளிவுபடுத்துகின்றது. எவ்வாறெனினும், இவ்வகையிலான அவசரமான செயன்முறைகளின் நேர்மைத்தன்மையானது எப்போதும் கேள்விக்குட்படுத்தப்படுதல் வேண்டும்.[3] 2015 ஆம் ஆண்டில் உடன்பட்டுக் கொண்டதன்படி இதுவரையில் பொறுப்புக்கூறுதல் தொடர்பாக எந்தவொரு முன்னேற்றமும் அறியப்படவில்லை என்பதுடன் அண்மித்த எதிர்காலத்தில் அத்தகைய முன்னேற்றங்கள் ஏற்படுத்தப்படுமா என்பதும் இன்னும் அறியப்படாத ஒன்றாகவே காணப்படுகின்றது.

முரண்பாடான கண்ணோட்டத்தினைத் தவிர்த்துப் பார்க்கின்றபோது, பொறுப்புக்கூறுதலுக்கான குறிப்பிடத்தக்க ஆதரவு இருப்பதனைக் காண முடிகின்றது. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் கணக்கெடுப்பு அமைப்பாகச் செயற்படுகின்ற சமூக குறிகாட்டியினால் அண்மையில் நடாத்தப்பட்ட கணக்கெடுப்பின்படி, 49.3% ஆன பங்குபற்றுனர்கள் கடந்த காலத்தில் இடம்பெற்ற சிவில் குழப்பங்களின்போது பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணங்களை வழங்குதல் மிகவும் இன்றியமையாதது என கூறியிருந்தனர். 22.5% ஆன பங்குபற்றுனர்கள் குற்றவாளிகள் தொடர்பான விசாரணைகளை நடாத்தி அவர்களை சட்டத்திற்கு முன்னிலையில் பொறுப்புக்கூறச் செய்தல் ஓரளவிற்கு முக்கியமானது என கூறியிருந்தார்கள்.[4] பொறுப்புக்கூறுதல் தொடர்பாகப் பார்க்கின்றபோது, அனைத்து சிறுபான்மை சமுதாயங்களிலுமுள்ள குறிப்பிடத்தக்க அளவிலான பெரும்பாலான நபர்கள் குற்றவாளிகள் தொடர்பான விசாரணைகளை நடாத்தி அவர்களை சட்டத்திற்கு முன்னிலையில் பொறுப்புக்கூறச் செய்தல் இன்றியமையாததாகும் என கூறியுள்ளனர். முஸ்லிம் சமுதாயத்திலிருந்து 89.4% ஆனோரும், மலையகத் தமிழ் சமுதாயத்திலிருந்து 87.4% ஆனோரும் தமிழ் சமுதாயத்திலிருந்து 86.2% ஆனோரும் இவ்வாறு கூறியுள்ளனர். அதேவேளை, சிங்கள சமுதாயத்திலிருந்து 67% ஆனோர் பொறுப்புக்கூறுதலுக்கு ஆதரவளித்துள்ளனர்.

குறிப்பிட்ட அதே கணக்கெடுப்பின்படி, 72.4% ஆன இலங்கையர்கள் இலங்கையில் மூன்று தசாப்த காலங்களாக இடம்பெற்ற மோதலின்போது அனைத்து தரப்பினராலும் இழைக்கப்பட்ட மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்கள் தொடர்பிலான உண்மைகளைக் கண்டறிதல் இன்றியமையாதது என நம்புகின்ற அதேவேளை, 18.2% ஆனோர் அது முக்கியமானதல்ல என கருதுகின்றனர். பொறுப்புக்கூறுதல் மற்றும் உண்மையைக் கண்டறிதல் ஆகியன தொடர்பாக அரசாங்கம் வாக்குறுதியளித்துள்ளபோதிலும் அவை தொடர்பான குறைவான முன்னேற்றத்தினை மாத்திரமே அடைந்துள்ள ஒரு தருணத்தில் அவற்றுக்கான ஆதரவு இவ்வகையில் பெறப்பட்டுள்ளது.

**இவ் அறிக்கை**

இலங்கையின் குற்றவியல் நீதி முறைமையில் மனித உரிமை மீறல்கள் தொடர்பான வழக்குத்தொடுப்பிலுள்ள பொறுப்புக்கூறுதலின் மட்டத்தினை மதிப்பிடுவதற்காக, அதிகளவில் பேசப்படுகின்ற ஏழு பிரசித்த வழக்குகள் தொடர்பில் இவ் அறிக்கையில் ஆராயப்பட்டுள்ளது. இவ் அறிக்கையானது மூன்று பகுதிகளாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது. முதலாவதாக, தெரிவு

---

[3] "Acres of land used as Army farms to be released", (Daily Mirror, 30 December 2018) available at <http://www.dailymirror.lk/article/-acres-of-land-used-as-Army-farms-to-be-released-160448.html>; "Army releases 1201 acres of land in the North", (News First, 21 January 2019) available at <available at <https://www.newsfirst.lk/2019/01/21/army-releases-1201-acres-of-land-in-the-north/>

[4] Centre for Policy Alternatives, Values and Attitudes Survey on 70 Years of Independence in Sri Lanka (February 2019) available at < available at <https://www.cpalanka.org/wpcontent/uploads/2019/02/70-Years-of-Independence-Survey-Report-Social-Indicator.pdf

செய்யப்பட்டுள்ள குறிப்பிட்ட வழக்குகள் எடுத்துக்காட்டுவதற்கு அமைவாக கட்டமைப்பு முறைகள் தோல்வியுறுவதற்கு மற்றும் தண்டனையிலிருந்து விடுபடுகின்ற கலாசாரம் மேலும் ஆழமாக வேரோடுவதற்கு காரணமாக அமைந்துள்ள பிற்போக்குடைய போக்குகளை நிறுவுகின்றது. இரண்டாவதாக, இப்போக்குகளை மாற்றுவதற்கான கட்டமைப்பு மற்றும் சட்ட சீர்திருத்தம் தொடர்பான விதந்துரைகளை பல்வேறுபட்ட பயனுரித்தாளிகளுக்கு வழங்குகின்றது.

இத்தெரிவு செய்யப்பட்ட வழக்குகள் அவற்றின் பிரசித்தத்தன்மை மற்றும் குற்றவியல் நீதி முறைமையில் அவ்வழக்குகளின் ஈடுபாடு என்பவற்றின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளன என்பதனை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் குறித்துக் கொள்கின்றது. எவ்வாறெனினும், பிரசித்தமடையாத மற்றும் குற்றவியல் நீதி முறைமையுடன் இதுவரையில் தொடர்புறாத மற்றும் இன்னும் ஆரம்பகட்ட விசாரணைகள்கூட நடைபெற்றிராத பல மனித உரிமை மீறல் சம்பவங்கள் காணப்படுகின்றன. இவற்றுள் பெரும்பாலான சம்பவங்கள் யுத்தத்தின்போது இடம்பெற்றவையாகக் காணப்படுவதுடன், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அவை சிறுபான்மை சமுதாயங்களுடன் தொடர்புற்றவையாக உள்ளன என்றபோதிலும் இம்மீறல்கள் சிறுபான்மை சமுதாயங்களுக்கானது மாத்திரமென மட்டுப்படுத்தப்பட முடியாதன ஆகும். இவ்வறிக்கையானது, காணப்படுகின்ற நீதி முறைமையில் ஏற்படுத்தக்கூடிய சாத்தியமான திருத்தங்களை மையப்படுத்துவதாய் அமைகின்றது என்றபோதிலும், இம்முறைமையுடன் ஏதோ ஒரு வகையில் தொடர்புற்ற மற்றும் இம்முறைமையில் உள்ள வேறுபட்ட பரிணாமங்களை எடுத்துக் காட்டுவதற்கு போதுமான, பரந்தளவிலான சூழ்நிலைகளைத் தன்னகத்தே கொண்டுள்ள வழக்குகளை ஆராய வேண்டியது அத்தியாவசியமாகின்றது.

இவ் அறிக்கையில் கலந்துரையாடப்பட்டுள்ள அனைத்து வழக்குகளும் ஆரம்பகட்ட விசாரணைகளை எதிர்கொண்டுள்ளபோதிலும், அவ்விசாரணைகள் பல்வேறு தருணங்களில் பல்வேறு காரணங்களுக்காக இடைநிறுத்தப்பட்டுள்ளன. இவ்வழக்குகளனாவை பல்வேறு வகையான வேறுபட்ட சூழ்நிலைகளை உடையனவாகக் காணப்படுகின்றன: ஆரம்ப கட்ட அரச விசாரணைகள் மற்றும் சர்வதேச ஈடுபாட்டுடனான அரச முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்ட வழக்குகள் (திருகோணமலை மாணவர்கள் மற்றும் ACF வழக்குகள்); இலங்கையின் வடக்கு மற்றும் தெற்கிலுள்ள ஊடகவியலாளர்கள் சம்பந்தப்பட்ட வழக்குகள் (நிமலராஜன் மற்றும் விக்கிரமதுங்கவின் வழக்குகள்); ஆயுத படையினரின் தொடர்பு குறித்த நேரடி சார்த்துதல்கள் காணப்படுகின்ற வழக்குகள் (திருகோணமலை மாணவர்கள், ACF மற்றும் காணாமற்போன பதினொரு பேர் தொடர்பான வழக்குகள்); மற்றும் யுத்தத்திற்கு பின்னர் இடம்பெற்ற வழக்குகள் (எக்னலியகொட வழக்கு).

தற்போதைய அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட ஆரம்பகால திருத்தங்களின் விளைவாக சில விசாரணைகளில் குறிப்பிட்டளவான சிறிய முன்னேற்றம் ஏற்படுத்தப்பட்டடுள்ள அதேவேளை, இன்னும் அதிகமான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதென மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் வலியுறுத்துகின்றது. 30/1 மற்றும் 34/1 போன்ற தீர்மானங்களினூடாக உடன்பட்டுக் கொண்டதற்கமைய பொறுப்புக்கூறுதல் செயன்முறை தொடர்பிலான முன்னேற்றத்தினை ஏற்படுத்தத் தவறியுள்ளமையினால், குற்றவியல் நீதி முறைமையினுள் பாரிய மனித உரிமை மீறல்களைக் கையாள்வதற்கு அவசியமான கட்டமைப்பு மற்றும் சட்டத் திருத்தங்களை மேற்கொள்வதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அதிகாரிகளை வலியுறுத்துகின்றது. அத்துடன், இத்தகைய திருத்தங்களை மேற்கொள்வதற்கான மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் அழைப்பு, 30/1 மற்றும் 34/1 போன்ற தீர்மானங்களினூடாக உடன்பட்டுக்கொண்டவற்றை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை தாமதப்படுத்துவதற்கான ஒரு செய்தியாக அமைய கூடாது என்பதுடன் இங்கு முன்மொழியப்பட்டுள்ள கட்டமைப்பு மற்றும் சட்டத் திருத்தங்களானவை, 30/1 மற்றும் 34/1 போன்ற தீர்மானங்களின் அமுலாக்கம் தொடர்பில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தினால் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள விதந்துரைகளுடன் இணைத்துப் பார்க்கப்படுதல் வேண்டும் என்பதனை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் வலியுறுத்துகின்றது.[5]

[5] Centre for Policy Alternatives, “CPA Calls on the Government of Sri Lanka to Uphold Commitments on Accountability and Security Sector Reform”, (January 2019) available at <https://www.cpalanka.org/cpacalls-

**பிரசித்த வழக்குகளின் போக்குகள்**

குற்றவியல் நீதி முறைமையில் காணப்படுகின்ற சவால்கள் மற்றும் திருத்தப்பட வேண்டிய பகுதிகள் போன்றவற்றை விளங்கிக் கொள்வதற்காக இவ் அறிக்கையில் பரிசீலிக்கப்பட்டுள்ள ஏழு வழக்குகளானவை:

01. மயில்வாகனம் நிமலராஜனின் கொலை-2000, 02. திருகோணமலையில் ஐந்து தமிழ் மாணவர்களின் கொலை- 2006, 03. மனிதாபிமான உதவி செயற்பாட்டாளர்களின் கொலை-2006, 04. பதினொரு இளைஞர்கள் கடத்தப்பட்டமை- 2008/9, 05. கீத் நொயர் இன் கடத்தல்-2008, 06. லசந்த விக்கிரமதுங்கவின் கொலை- 2009, 07. பிரகீத் எக்னலியகொட காணாமல்போனமை

இவ்வொவ்வொரு வழக்கும் இவ் அறிக்கையில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளதுடன் விசாரணைகள் மற்றும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள நபர்களை கைது செய்வதற்காக இதுவரையில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்பனவற்றின்மீது அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இவ் ஒவ்வொரு வழக்கும் வேறுபட்ட பல பிரச்சனைகளை அடையாளப்படுத்திக் காட்டுகின்ற அதேவேளை, மேலதிக அவதானம் தேவைப்படுகின்ற பொதுவான போக்குகளை அடையாளப்படுத்தி அவற்றைக் கையாள அவசியமான பரந்தளவிலான கட்டமைப்பு மற்றும் சட்டத் திருத்தங்கள் தொடர்பான விதந்துரைகளை முன்வைப்பதற்கு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் முயற்சித்துள்ளது. இவ்விதந்துரைகள் எதிர்காலத்தில் வெளியிடப்படவுள்ள மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் அறிக்கைகளில் விரிவாகக் கலந்துரையாடப்படும்.

**தண்டனையிலிருந்து விடுபடுகின்ற கலாச்சாரம்**

குற்றவியல் வழக்குகள் சட்டத்தின் நியாயமான செயன்முறைகளுக்கு அமைவாக சரியான காலப்பகுதிக்குள் மற்றும் வினைத்திறனான முறையில் கையாளப்படாதபோது மற்றும் குற்றவாளிகள் பொறுப்புக்கூறுதலுக்கு உட்படுத்தப்படாதபோது எந்தவொரு நாட்டிலும் தண்டனையிலிருந்து விடுபடுகின்ற கலாச்சாரம் தோற்றம் பெறுகின்றது. கடந்த காலங்களில் அனைத்து மட்டங்களிலும் உள்ள அரச ஊழியர்கள் மற்றும் ஏனையோர் நாட்டில் நிறுவனமயப்படுத்தப்பட்டரீதியில் தண்டனையிலிருந்து விடுபடுகின்ற கலாச்சாரம் நிலைத்து நிற்பதற்கு பங்களித்துள்ளமையினை இலங்கை கண்டிருக்கின்றது. இவ் அறிக்கையில் கலந்துரையாடப்பட்டிருக்கின்ற சில வழக்குகள் ஒரு தசாப்தமளவு பழமையானவை என்பதுடன் அவை தொடர்பான குற்றவியல் விளக்கங்களுக்கான குற்றப்பத்திரங்களை பதிவு செய்வதற்கான எவ்வித நடவடிக்கைகளும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என்பதனை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் குறித்துக் கொள்கின்றது.[6] இவற்றைத் தவிர, அனேகமான பல பழைய வழக்குகளில் குற்றவாளிகளை பொறுப்புக்கூறச் செய்வதற்கான எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என்பதனை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் குறித்துக் கொள்கின்றது. தண்டனையிலிருந்து விடுபடும் கலாசாரம் என்பது கீழே கூறப்பட்டுள்ள போக்குகளின் இணைப்பினால் உருவாக்கப்படுகின்றதொரு பரந்தளவிலான எண்ணக்கருவாகப் பார்க்கப்படலாம்.

**வழக்குத்தொடுப்புக்களின்மை அல்லது தாமதமான வழக்குத்தொடுப்புக்கள்**

இவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரசித்தமான வழக்குகளில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள குற்றவாளிகள் தொடர்பாக ஒன்றில் இதுவரை வழக்குத்தொடுப்புக்கள் ஆரம்பிக்கப்படவில்லை அல்லது குற்றம் இடம்பெற்று ஒரு தசாப்தம் நிறைவடைந்த பின்னரும்கூட

---

the-government-of-sri-lanka-to-uphold-commitments-on-accountability-and-security-sectorreform/> , Centre for Policy Alternatives “Human Rights Commitments made by the Government of Sri Lanka and Ways Forward” (February 2018) available at < https://www.cpalanka.org/human-rightscommitments-made-by-the-government-of-sri-lanka-and-ways-forward/>

[6] மனிதாபிமான செயற்பாட்டாளர்களின் கொலை அல்லது திருகோணமலையில் ஐந்து மாணவர்களின் கொலை மற்றும் நிமலராஜன் மயில்வாகனம் மற்றும் லசந்த விக்கிரமதுங்கவின் கொலைகள் தொடர்பில் குற்றப்பத்திரம் பதியப்பட்டுள்ளனவா என்பது தொடர்பான எவ்விதத் தகவல்களும் பகிரங்க தகவல் பரப்பில் இல்லை.

வழக்குத்தொடுப்புக்கள் தாமதமடைந்து கொண்டிருக்கின்றன.[7] முழுமையான குற்றவியல் நீதி முறைமையில் காணப்படுகின்ற பல குறைபாடுகளின் விளைவாக வழக்குத்தொடுப்புக்களின்மை அல்லது தாமதமான வழக்குத்தொடுப்புக்கள் என்பன தோற்றம் பெறுகின்ற அதேவேளை (இது ஒவ்வொரு வழக்கிலும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது), இவற்றுக்கு பங்களிக்கின்ற சில பொதுவான காரணிகளாக அரசியல் செல்வாக்கு, நீதித்துறையில் தீர்க்கப்படாது நிலுவையிலுள்ள வழக்குகள் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்தில் தோன்றுகின்ற தாமதங்கள் என்பனவற்றைக் குறிப்பிடலாம்.[8] சட்ட விவகாரங்கள் (ஊழல் எதிர்ப்பு) மற்றும் ஊடகம் மீதான துறைசார் மேற்பார்வைக்குழுவானது இத்தகைய தாமதங்களைக் கையாள்வதற்கான பல விதந்துரைகளை வழங்கியுள்ளது.[9] மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமும் சட்டமா அதிபர் திணைக்களத்தை சீர்திருத்துவதற்கான குறிப்பான விதந்துரைகளைக் கடந்த காலத்தில் மேற்கொண்டிருந்தது என்பதுடன் அவற்றை இவ் அறிக்கையில் மீளவும் எடுத்துக்காட்டியுள்ளது.[10]

**சுயாதீனமான விசாரணைகளின்மை**

இவ் அறிக்கையில் ஆராயப்பட்டுள்ள பிரசித்தமான வழக்குகளின் விசாரணைச் செயன்முறையினை ஆராய்ந்து பார்க்கின்றபோது, இலங்கை பொலிஸ், தீவிரவாத புலனாய்வு திணைக்களம் மற்றும் குற்றப் புலனாய்வு திணைக்களம் போன்ற விசாரணை அமைப்புக்கள் அரசியல் செயற்பாட்டாளர்களால் மற்றும் வேறுபட்ட அக்கறையுள்ள தரப்புக்களினால் பல்வேறுபட்ட சந்தர்ப்பங்களில் செல்வாக்கிற்கு உட்படுத்தப்பட்டுள்ளன அல்லது குறிப்பிட்ட விசாரணைகளை தடம் மாற்றுமாறு கட்டாயப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றுக்கான சான்றுகளாக விக்கிரமதுங்கவின் கொலை வழக்கு மற்றும் எக்னலியகொட காணாமற்போனமை குறித்த வழக்குகளைக் குறிப்பிடலாம். எவ்வாறெனினும், சில விசாரணையாளர்களின் துணிகரமான மற்றும் எதிர்ப்புக்களைத் தாண்டித் தொடர்ச்சியான பணியினால் சில வழக்குகளில் சில திருப்புமுனைகள் ஏற்பட்டுள்ளமையினையும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் குறித்துக் கொள்கின்றது.[11] இவை வரவேற்கப்படுகின்றன. எனினும், பல வழக்குகளில் தோன்றுகின்ற சவால்கள் விசாரணைகளின் சுயாதீனத்தன்மை மற்றும் நம்பகத்தன்மை தொடர்பில் பாரதூரமான பிரச்சனைகளை ஏற்படுத்துகின்றன.

**பாதிக்கப்பட்டவர் மற்றும் சாட்சிகளின் பாதுகாப்பின் வினைத்திறனற்ற தன்மை**

பெரும்பாலும் அனைத்து வழக்குகளிலும் காணப்படுகின்ற பொதுவான அம்சமாக அமைவது யாதெனில், குறிப்பிட்ட வழக்குகளில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகள் அச்சுறுத்தப்பட்டுள்ளார்கள், தொந்தரவுகளுக்குள்ளாக்கப்பட்டுள்ளனர், கடத்தப்பட்டுள்ளனர் மற்றும் சில சந்தர்ப்பங்களில் கொல்லப்பட்டுள்ளனர்.[12] இலங்கையானது தற்போது 2015 ஆம்

---

7 மனிதாபிமான செயற்பாட்டாளர்களின் கொலை அல்லது திருகோணமலையில் ஐந்து மாணவர்களின் கொலை மற்றும் நிமலராஜன் மயில்வாகனத்தின் கொலை போன்றன தொடர்பிலான வழக்குத்தொடுப்புக்கள் பற்றிய எவ்விதத் தகவல்களும் பகிரங்க தகவல் பரப்பில் இல்லை.

8 DBS Jeyaraj, “CID Completes Investigations in Many Cases but No Action Taken Due to Delays in Attorney-General’s Dept” (16 July 2017) available at <http://dbsjeyaraj.com/dbsj/archives/54266>

9 The Sectoral Oversight committee on Legal Affairs (anti-corruption) & Media, Recommendations Pertaining to the Expeditious and Efficient Administration of Criminal Justice, 20 September 2017, available at <https://www.parliament.lk/uploads/comreports/1510738363068517.pdf>

10 Centre for Policy Alternatives, “Written Submissions by the Centre for Policy Alternatives to the Subcommittee of the Constitutional Assembly on the Judiciary”, 2016, available at <https://www.cpalanka.org/wp-content/uploads/2016/07/CPA-Submission-on-Judiciary-Final.pdf >

11 “Phone records lead CID big arrest Keith Noyahr abduction” (Sunday Observer, 15 April 2018) available at <http://www.sundayobserver.lk/2018/04/15/news-feature/phone-records-lead-cid-big-arrest-keithnoyahr-abduction-case>; “After explosive revelations in Court in Navy 11 youth abduction case: Families of missing boys hope justice is finally within reach”, (Sunday Observer, 2 September 2018) available at < available at <http://www.sundayobserver.lk/2018/09/03/news-features/after-explosive-revelationscourt-navy-11-youth-abduction-case-families>

12 மனிதாபிமான செயற்பாட்டாளர்களின் கொலை அல்லது திருகோணமலையில் ஐந்து மாணவர்களின் கொலை மற்றும் 11 மாணவர்கள் காணாமற்போன வழக்குகளில் பல்வேறு சந்தர்ப்பங்களில் சாட்சிகள் அச்சுறுத்தப்பட்டுள்ளனர். சந்தியா எக்னலியகொட பல வருடங்களாக மரண அச்சுறுத்தல்களுக்கு ஆளாகி வருகின்றார்.

ஆண்டின் 4 ஆம் இலக்க, குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டம் என்ற சட்டத்தை இயற்றியிருப்பினும்கூட அதன் அமுலாக்கம் மற்றும் வினைத்திறனாந்தன்மை தொடர்பிலான சவால்கள் இன்னும் நிலைத்திருக்கின்றன என்பதுடன் அதன் சுயாதீனத்தன்மை மற்றும் பக்கச் சார்பற்ற தன்மையினை உறுதிப்படுத்துவதற்கான மேலதிக திருத்தங்கள் தேவைப்படுகின்றன.[13] உதாரணமாக, இச்சட்டமானது குற்றங்களினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் குற்றங்களின் சாட்சிகளுக்கு உதவியளிக்கின்ற மற்றும் பாதுகாப்பளிக்கின்ற பிரிவொன்றை பொலிஸ்மா அதிபருக்கு கீழ் நியமித்துள்ளது. இதன்படி, இப்பிரிவானது பொலிஸாருடன் தொடர்புகளை உடையதாகக் காணப்படும். இது அதன் சுயாதீனத்தன்மையினை கேள்விக்குட்படுத்துகின்றது. கடந்த காலங்களில் குற்றங்களினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் குற்றங்களின் சாட்சிகளுக்கு அச்சுறுத்தல் விடுத்தமை தொடர்பான தொடர்ச்சியான குற்றச்சாட்டுக்கள் இலங்கை பொலிஸிற்கு எதிராகவே முன்வைக்கப்பட்டுள்ள நிலையில், இது இச்சட்டத்தின் அடிப்படை குறைபாடொன்றாகக் கருதப்படுகின்றது.

**சான்றுகளை சேதப்படுத்தல், மறைத்தல் மற்றும் அழித்தல்**

குறிப்பிட்ட எண்ணிக்கையான வழக்குகளில் விசாரணைகளின் முடிவிற்கு மற்றும் குற்றவாளிகளை நீதிக்கு முன் நிறுத்துவதற்கு இன்றியமையாத சான்றுகளை சேதப்படுத்துவதில், மறைப்பதில் மற்றும் அழிப்பதில் சட்ட மருத்துவ அதிகாரி[14], பொலிஸ்[15] மற்றும் தீவிரவாத புலனாய்வுத் திணைக்களம்[16] உள்ளடங்கலான வேறுபட்ட பல செயற்பாட்டாளர்கள் முக்கிய வகிபங்காற்றியுள்ளமையினை அவதானிக்க முடிகின்றது. இவை விசாரணைகள் நீண்டகாலமாக இடம்பெறுகின்றமை மற்றும் அதன் விளைவாக ஏற்படுகின்ற வழக்குத் தொடுப்பின் தாமதங்கள் என்பனவற்றுக்கு காரணமாக அமைகின்றன. அத்துடன் இதன் காரணமாக சான்றுகள் பொருத்தமற்றதாக்கப்படுவதுடன் அதன் விளைவாக வழக்குத்தொடுப்புக்கள் முடிவுறுத்தப்படுகின்ற நிலையும் ஏற்படுகின்றது.

**விசாரணை நிறுவனங்களில் அரசியல் தலையீடுகள்**

அரசியலமைப்பிற்கான 19வது திருத்தம் போன்ற திருத்தங்கள் நீதித்துறை மற்றும் ஏனைய நிறுவனங்களின் சுயாதீனத் தன்மையினை உறுதிப்படுத்த எத்தனித்துள்ளபோதிலும்கூட, நிறுவன மட்டத்திலான அரசியல் தலையீடுகள் இன்னும் நிலைத்திருக்கின்றன. அரசியல் செயற்பாட்டாளர்கள் மற்றும் வேறு பல திறத்தவர்களினால் விசாரணைகளை இடைநிறுத்துவதற்கான அத்தகைய முயற்சிகள் நிறுவன மட்டத்தில் (பௌதீக விசாரணை செயன்முறை மட்டத்தில் மட்டுமல்லாது) மேற்கொள்ளப்படுகின்றன. உதாரணமாக, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விசாரணைகளை நடாத்த முயற்சித்தமைக்காக குற்றப் புலனாய்வு திணைக்களத்தினைப் பகிரங்கமாக விமர்சித்திருந்தார்.[17] மேலும், 2016 ஆம் ஆண்டின் ஆரம்ப

---

[13] Centre for Policy Alternatives, The Need for a Strong Victim and Witness Assistance and Protection Mechanism, (2014) available at < available at <https://www.cpalanka.org/the-need-for-a-strong-victimand-witness-assistance-and-protection-mechanism/>; Victim and Witness protection – the need for further reform (South Asian Centre for Legal Studies, 2015) <http://sacls.org/index.php?option=com_k2&view=item&id=143:victim-witness-protection-the-needfor-further-reform&Itemid=720>

[14] "Sri Lanka to investigate crooked judicial medical officers" (Economy Next , 22 March 2017) available at < available at <https://economynext.com/Sri_Lanka_to_investigate_crooked_judicial_medical_officers-37640.html>; "First autopsy report on Lasantha murder issued to mislead probe" (Sunday Leader, 13 August 2017) available at < available at <http://www.thesundayleader.lk/2017/08/13/first-autopsyreport-on-lasantha-murder-issued-to-mislead-probe/>

[15] "Lasantha murder ex DIG involved in concealing evidence" (Daily News, 16 March 2018) available at < <http://www.dailynews.lk/2018/03/16/local/145708/lasantha-murder-ex-dig-involved-concealingevidence>

[16] "Sri Lanka police cover up in Lasantha emerge after key arrests" (Economy Next, 22 February 2018) available at < available at <https://economynext.com/Sri_Lanka_police_cover_up_in_Lasantha_murder_emerge_after_key_arrest-39963-10.html>

[17] "Prez perturbed over CDS arrest move" (Daily Mirror , 13 September 2018) available at < available at <http://www.dailymirror.lk/article/Prez-perturbed-over-CDS-arrest-move-155462.html>

காலப்பகுதியில் குற்றவாளிகள் மீது வழக்குத்தொடர்வதில் சிறப்பான நபர் எனப் போற்றப்பட்ட எக்னலியகொட வழக்கின் சிரேஷ்ட அரசதரப்பு சட்டத்தரணியை இடமாற்றம் செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.[18] மிகவும் அண்மையில், விக்கிரமதுங்கவின் கொலை வழக்கு மற்றும் எக்னலியகொட காணாமல்போன வழக்கு போன்ற பாரிய வழக்குகளில் பல திருப்புமுனைகளை ஏற்படுத்திய பிரதான விசாரணையாளரை இடமாற்றம் செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.[19]

**கட்டமைப்பு மற்றும் சட்ட திருத்தத்திற்கான விதந்துரைகள்**

இவ் அறிக்கையில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள சவால்களை வெற்றிகொள்வதற்கு மற்றும் நிலைத்திருக்கின்ற தண்டனையிலிருந்து விடுபடுகின்ற கலாசாரத்தினை முறியடிப்பதற்கு தீர்மானம் மிக்க உடனடி நடவடிக்கைகள் மற்றும் நீண்ட கால கட்டமைப்பு திருத்தங்கள் என்பன வேறுபட்ட பல பயனுரித்தாளிகளினால் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும். அரசாங்கம், சட்டமா அதிபர் திணைக்களம், நீதித்துறை, சிவில் சமூக ஒழுங்கமைப்புக்கள் மற்றும் சர்வதேச செயற்பாட்டாளர்கள் என்போரை இத்தகைய பயனுரித்தாளிகளாகக் கருதலாம். மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமானது கீழ்வரும் விரிவான விதந்துரைகளை அவதானத்திற்காக வழங்குகின்றது. இவ்விதந்துரைகள் குற்றவியல் நீதி திருத்தத்தினை மையப்படுத்தி வெளியிடப்படவிருக்கின்ற மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் எதிர்கால அறிக்கைகளில் மிகவும் விரிவாகக் கலந்துரையாடப்படும்.

**பொதுவான விதந்துரைகள்**

**கட்டமைப்பு**

- புலனாய்வு, சட்டம் மற்றும் ஒழுங்கு திணைக்களம் மற்றும் அதிகாரிகள் உள்ளிட்டவர்களுடைய செயற்பாடுகள் தொடர்பான முறையான அறிக்கையிடல் மற்றும் கண்காணிப்பு என்பனவற்றினூடாக அவர்கள் மீதான பாராளுமன்ற மேற்பார்வையினை வலுப்படுத்தல்.
- குற்றங்களினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் குற்றங்களின் சாட்சிகளுக்கான முழுமையான மற்றும் வினைத்திறனான பாதுகாப்பு பரப்பினை வழங்குதல் மற்றும் அவர்கள் அச்சுறுத்தல் மற்றும் மிரட்டல்களை எதிர்கொள்ள மாட்டார்கள் என்பதனை உறுதிப்படுத்தல்.
- நம்பகமான மற்றும் பக்கச் சார்பற்ற விசாரணைகள் மற்றும் வழக்குத் தொடுப்பிற்கான சுயாதீனமான பகிரங்க வழக்குத்தொடுனர் அலுவலகமொன்றை ஸ்தாபித்தல்.

**சட்டவாக்கம்**[20]

- குற்றங்களினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் குற்றங்களின் சாட்சிகளுக்கான சட்டம், சான்று கட்டளைச்சட்டம் மற்றும் பொலிஸ் கட்டளைச்சட்டம் போன்ற முக்கிய சட்டங்களை மீளாய்வு செய்தல் மற்றும் அவசியமான திருத்தங்களை மேற்கொள்ளுதல்.
- சர்வதேச குற்றங்கள் போன்ற குறிப்பிட்ட சில குற்றங்களை உட்சேர்த்துக் கொள்ளக்கூடிய வகையில் மற்றும் நடபடிமுறையிலுள்ள இடைவெளிகளை நிரப்பக்கூடிய வகையில் தண்டனை கோவை மற்றும் குற்றவியல் நடபடிமுறை கோவை என்பவற்றிற்கு அவசியமான திருத்தங்களைச் செய்தல்.

---

[18] "Confusion over "transfer" of Senior State Counsel on Eknaligoda case" (DailyFT, 9 February 2016) available at < available at <http://www.ft.lk/article/524035/Confusion-over%E2%80%9Ctransfer%E2%80%9D-of-Senior-State-Counsel-on-Eknaligoda-case>

[19] "CID's IP Nishantha Silva transferred" (Daily Mirror, 19 November 2018) available at < available at <http://www.dailymirror.lk/article/CID-s-IP-Nishantha-Silva-transferred-158572.html>

[20] இவ்விதந்துரைகள் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் எதிர்கால அறிக்கைகளில் மிகவும் விரிவாகக் கலந்துரையாடப்படும்.

- நீதிபதிகளுக்கான சம்பளங்கள் மற்றும் பணியாற்றுவதற்கான நிலைப்பாடுகள் போதுமானதாக உள்ளன மற்றும் தொழிற்பண்பாட்டு நடத்தை மற்றும் நீதிமுறை விழுமியங்கள் என்பன மீள்வலியுறுத்தப்பட்டுள்ளன என்பதனை உறுதிப்படுத்தல்.[21]
- சுயாதீனமான பகிரங்க வழக்குத்தொடுனர் அலுவலகமொன்றை ஸ்தாபிப்பதற்கு அவசியமான கட்டமைப்பினை உருவாக்குதல்.
- விசாரணை நிறுவனங்களில் ஊழலைத் தடுப்பதற்கான மற்றும் எதிர்ப்பதற்கான வினைத்திறனான பொறிமுறைகள் மேற்கொள்ளப்படுவது உறுதிப்படுத்தப்பட வேண்டுமென்பதுடன் ஊழலுக்கு எதிரான விசாரணையாளர்களை பாதுகாத்தல் வேண்டும்.[22]

**குறிப்பான பயனுரித்தாளிகளுக்கான விதந்துரைகள்**

சட்டமா அதிபர் திணைக்களத்திலுள்ளோருக்கானது

- கடந்த கால வழக்குகளை மீளாய்வு செய்வதற்கான உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் தொடர்புடைய குற்றவாளிகள் மீது குற்றங்களைப் பதிவு செய்ய மற்றும் வழக்குத் தொடுக்க அவசியமான நடவடிக்கைகளை எடுத்தல்.
- பாரிய மனித உரிமை மீறல்கள் தொடர்பான வழக்குத்தொடுப்பு தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்திலுள்ள அதிகாரிகளுக்கு மற்றும் ஏனையோருக்கான விசேடமயப்படுத்தப்பட்ட செயலமர்வுகளை நடாத்தல் மற்றும் அதிகாரிகள் எவ்வித அரசியல் தலையீடுகளுமின்றி குற்றவாளிகளுக்கு எதிரான வழக்குத்தொடுப்புக்களை மேற்கொள்ளத்தக்கதொரு சூழலை உருவாக்குதல்.
- பாரிய மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணைகள் மற்றும் வழக்குத்தொடுப்புக்களுக்கான சர்வதேச தரத்திற்கு அமைவான முழுமையான மற்றும் தெளிவான வழிகாட்டல்களை மூன்று மொழிகளிலும் வழங்குதல்.
- குற்றப்பத்திரிகைகளைப் பதிவு செய்வதில் மற்றும் வழக்குத்தொடுப்பதில் ஏற்படுகின்ற தாமதங்களைப் புரிந்து கொள்வதற்கான மீளாய்வொன்றினை மேற்கொள்ளல் மற்றும் திணைக்களத்திலுள்ள சட்டத்தரணிக்கு முன்னிலையிலுள்ள வழக்குகளுக்கு அவரே பொறுப்புக்கூறுதல் வேண்டும் என்பதனை உறுதிப்படுத்தும்பொருட்டு திணைக்களத்திலுள்ள அலுவலர்களுக்கிடையில் விழிப்புணர்வை ஏற்படுத்தல், மேலதிக பணியாளர்களை இணைத்து கொள்ளுதல் மற்றும் வேறு ஏதேனும் திருத்தங்களை மேற்கொள்ளுதல்.
- சட்ட விவகாரங்கள் (ஊழல் எதிர்ப்பு) மற்றும் ஊடகம் மீதான துறைசார் மேற்பார்வைக்குழுவினால் அடையாளப்படுத்தப்பட்ட கட்டமைப்புசார் திருத்தங்களை அமுலாக்கம் செய்தல்.[23]
- பாரிய மனித உரிமை மீறல் தொடர்பான வழக்குகளின் முன்னேற்றத்தினை அறியும்பொருட்டு அவை தொடர்பான தரவுத்தளமொன்றைப் பேணுதல்.
- திணைக்களத்திற்குள் வினைத்திறனான வழக்கு முகாமைத்துவ முறைமையொன்றினையும் முறையான குற்றப்பதிவு தராதரங்களையும் பேணுதல்.
- ஒவ்வொரு வழக்குத்தொடுனரின் கீழும் விசாரணை மற்றும் வழக்குத் தொடுப்பிற்காக உள்ள வழக்குகள் தொடர்பான இரகசியத்தன்மையினை உறுதிப்படுத்துகின்ற அதேவேளை வெளிப்படைத்தன்மையினை பேணும்பொருட்டு சட்டமா அதிபர்

[21] See the 2001 Opinion No. 1 of the CCJE (Consultative Council of European Judges), available at <https://rm.coe.int/1680747830>; UN Basic Principles on the Independence of the Judiciary, available at <https://www.ohchr.org/en/professionalinterest/pages/independencejudiciary.aspx>

[22] Group of States Against Corruption, Corruption Prevention – Members of Parliament, Judges and Prosecutors – Conclusion and Trends, (2017, 4th Evaluation Round) <https://rm.coe.int/corruptionprevention-members-of-parliament-judges-and-prosecutors-con/16807638e7>

[23] The Sectoral Oversight committee on Legal Affairs (anti-corruption) & Media, Recommendations Pertaining to the Expeditious and Efficient Administration of Criminal Justice, 20 September 2017, available at <https://www.parliament.lk/uploads/comreports/1510738363068517.pdf>

திணைக்களத்திற்கான உள்ளக விதிகள் மற்றும் நடத்தைக் கோவை என்பன ஆக்கப்படுதல் வேண்டும்.

- தனிப்பட்ட வழக்குத்தொடுனர்கள் வழக்குத்தொடுப்பு சேவைக்குள் அல்லது அதற்கு வெளியே எவ்வித முறையற்ற அல்லது சட்டமுரணான அழுத்தங்களுக்கும் உட்பட மாட்டார்கள் என்பதனை உறுதிப்படுத்தல் மற்றும் வழக்குத்தொடுப்பு சேவையானது சட்டவாட்சியினால் ஆளுகை செய்யப்படுகின்றது என்பதனை உறுதிப்படுத்தல்.[24]

**விசாரணைகளில் ஈடுபடுகின்ற செயற்பாட்டாளர்களுக்கு (பொலிஸ், குற்றப் புலனாய்வு மற்றும் தீவிரவாத புலனாய்வு திணைக்களத்தினர்)**

- அரசியல் அல்லது வேறு எவ்வித அழுத்தங்களுக்கும் உட்படாது தொழில்முறையான, பக்கச்சார்பற்ற மற்றும் சுயாதீனமான விசாரணைகளை மேற்கொள்வதனை இயலுமானதாக்குகின்ற கட்டமைப்புசார் திருத்தங்களை அறிமுகப்படுத்தல்.[25]
- இக்குற்றங்களுடன் தொடர்புடைய சான்றுகளை மீட்டல், பிரதி செய்தல் மற்றும் களஞ்சியப்படுத்தல் தொடர்பில் வெளிப்படைத்தன்மையை பேணுதல், சான்றுகளை அழித்தல் மற்றும் சேதப்படுத்தல் போன்ற குறிப்பான பிரச்சனைகளை கையாளுதல்.
- விசாரணைகள் நடைபெறுகின்றபோது இரகசியமான தகவல்களை கையாள்வதில் மற்றும் பரிமாறுவதில் முறையான கவனத்துடன் செயற்படுதல்.
- விசாரணைகள் உடனடியாக நடாத்தப்படுகின்றன மற்றும் முக்கியமான தடயவியற் சான்றுகள் சர்வதேச தராதரங்களுக்கு அமைவாக சேகரிக்கப்பட்டு களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன என்பதனை உறுதிப்படுத்தல்.
- ஒவ்வொரு வழக்கு தொடர்பாகவும் சேகரிக்கப்பட்டுள்ள சான்றுகளை உள்ளடக்குகின்ற தரவுத்தளமொன்றைப் பேணுதல் மற்றும் அத்தரவுத்தளத்தினை பாராளுமன்ற மேற்பார்வைக்குழு மற்றும் ஏனைய நீதிமுறை செயற்பாட்டாளர்கள் அணுகக்கூடியதாக உள்ளமையினை உறுதி செய்தல்.
- விசாரணைகளின் முன்னேற்றங்களை கண்காணிப்பதற்கான ஒரு முறையினை ஸ்தாபிப்பதுடன் விசாரணையாளர்கள் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கிடையில் சிறப்பான ஒருங்கிணைப்பொன்றினை ஸ்தாபித்தல்.
- வேறுபட்ட விசாரணை அமைப்புக்களுக்கிடையில் சிறப்பான ஒருங்கிணைப்பு மற்றும் ஒத்துழைப்பினை ஸ்தாபித்தல்.
- குற்றப்பத்திரங்களைப் பதிவு செய்வதிலுள்ள தாமதங்களைத் தடுக்கும்பொருட்டு சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ள வழக்குகளின் முன்னேற்றத்தை கண்காணித்தல் மற்றும் வழக்கு கோப்புக்களில் ஏற்படுத்தப்படுகின்ற முன்னேற்றங்களைக் கண்காணிப்பதற்கான முறைமையொன்றை ஸ்தாபித்தல்.
- நீதவான் நீதிமன்றத்தில் வழக்கொன்றினை ஆரம்பிப்பதற்கு அவசியமான பயிற்சியினை பொலிஸ் அலுவலர்களுக்கு அளித்தல் (பொலிஸ் அதிகாரிகளுக்கு நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத்தொடுப்பதற்கான அதிகாரம் காணப்படுவதுடன், இங்குதான் பல வழக்குகள் முதலாவதாக எடுத்துக் கொள்ளப்படுகின்றன)
- குற்ற நிகழிட விசாரணைகள், பாதிக்கப்பட்டவர் மற்றும் சாட்சிகளை நேர்காணல் மற்றும் குற்றவாளிகளை கைது செய்தல் போன்ற விடயப்பரப்புக்கள் தொடர்பாக விசாரணை அதிகாரிகளுக்கு செயலமர்வுகளை நடாத்துதல்.
- அந்தஸ்த்து மற்றும் பதவிநிலை என்பவற்றைப் பொருட்படுத்தாது அனைத்து சந்தேக நபர்களும் ஒரே முறையில் நடத்தப்படுகின்றார்கள் என்பதனை உறுதிப்படுத்தல் மற்றும் குறிப்பிட்ட சந்தேக நபர்களை விசேடமாக நடாத்துவதனைத் தவிர்த்துக் கொள்ளல்.

---

[24] Criminal Justice Standards for the Prosecution Function (American Bar Association, 13 February 2015) available at <https://www.americanbar.org/groups/criminal_justice/standards/ProsecutionFunctionFourthEdition>

[25] இவ்விதந்துரைகள் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் எதிர்கால அறிக்கைகளில் மிகவும் விரிவாகக் கலந்துரையாடப்படும்.

## நீதித்துறைக்கு

- இத்தகைய தன்மையுடைய வழக்குகளை கையாள்தல் மற்றும் தீர்மானித்தல் தொடர்பாக நீதிமுறை அலுவலர்கள் மற்றும் நீதிமன்றப் பணியாளர்களுக்கு அவசியமான செயலமர்வு மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடாத்துதல்.
- நீதித்துறை மீது செல்வாக்கினைப் பிரயோகிக்க எத்தனிக்கின்ற நபர்களுக்கு எதிராகத் தகுந்த சட்ட நடவடிக்கை எடுப்பதனூடாக நீதித்துறையின் கௌரவம் மற்றும் சுயாதீனத்தன்மையினைப் பாதுகாப்பதற்கான அனைத்து சாத்தியமான வழிமுறைகளையும் எடுத்தல்.
- எதிர்தரப்பு சட்டத்தரணிகள், சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் விசாரணை அதிகாரிகளினால் ஏற்படுத்தப்படுகின்ற தாமதங்களைத் தடுப்பதற்கான கடுமையான நடவடிக்கைகளை எடுத்தல். இது நாளாந்த விளக்கங்களை நடாத்துவதனையும் உள்ளடக்கும்.
- பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட தரப்புக்கள் அடக்குமுறை மற்றும் பழிவாங்கப்படல் போன்ற எவ்வித பயங்களுமின்றி போதுமான பாதுகாப்புடன் பங்கேற்கத்தகு நீதிமன்ற சூழலை உருவாக்குவதற்கு தேவையான அனைத்து அவசியமான ஏற்பாடுகளையும் மேற்கொள்ளுதல்.

## சிவில் சமூக செயற்பாட்டாளர்களுக்கானது

- பொருத்தமான அதிகாரிகளிடமிருந்து மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் செயற்படாமை அல்லது தாமதத்திற்கான காரணங்கள் என்பனவற்றை கோருவதனூடாக இப்பிரசித்தமான வழக்குகள் மற்றும் வேறு பல பாரிய மனித உரிமை மீறல்கள் தொடர்பான விடயங்களைப் பின்தொடர்தல்.
- வழக்குத்தொடரப்பட்டுள்ள வழக்குகளை கண்காணித்தல் மற்றும் தாமதங்கள், தலையீடுகள், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளின் பாதுகாப்பு மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக ஏதேனும் பிரச்சனைகள் காணப்படின் அது தொடர்பாகக் கேள்வியெழுப்புதல்.
- தகவலுக்கான உரிமைச் சட்டம் போன்ற நடைமுறையிலுள்ள பொறுப்புக்கூறச் செய்யத்தக்க ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல் மற்றும் பாரிய மனித உரிமை மீறல்கள் தொடர்பான நடவடிக்கைகளை ஆரம்பிக்குமாறு மற்றும் அவற்றைத் துரிதப்படுத்துமாறு மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்தல்.
- பாரிய மனித உரிமை மீறல்கள் தொடர்பான வழக்குகள் மற்றும் பொறுப்புக்கூறுவதற்கான தேவை என்பன தொடர்பாக பொது மக்களை அறிவுறுத்துவதற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்ப்படுத்தல் மற்றும் தேவையான நடவடிக்கைகளை சாத்தியப்படுத்துகின்ற பொதுமக்கள் அழுத்தத்தினை உருவாக்குதல்.
- இவ்வழக்குகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கு மற்றும் சாட்சிகளுக்கு சட்ட ஆலோசனை, நிதி உதவி மற்றும் மதிவளத்துணை என்பனவற்றை வழங்குதல்.
- பாரிய மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணைகள், வழக்குத்தொடுப்புக்கள், நீதிமுறை நடபடிமுறைகள் மற்றும் அறிக்கையிடுதல்கள் என்பன மூன்று மொழிகளிலும் இடம்பெறல் வேண்டும் என்பதற்காக வாதாடல் மற்றும் அதனை ஆதரித்தல்.

## அரசியல் தலைவர்களுக்கானது

- தங்களுடைய பிரதிநிதிகளின் நடத்தை தொடர்பில் குறிப்பாக விசாரணைகள் மற்றும் நீதிமுறைச் செயற்பாடுகளில் தலையிடுதல் மற்றும் செல்வாக்குச் செலுத்துதல் தொடர்பான ஒழுக்க வழிகாட்டிகளை ஏற்றுக் கொள்ளுதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்.
- கட்சியின் உறுப்பினர்கள் வழக்குகளின் குற்றப் பதிவுகள் மற்றும் முன்னேற்றத்தினை அரசியல் இலாபங்களுக்காக துஷ்பிரயோகப்படுத்துவதனைத் தடுத்தல்.

- விசாரணைகளில் தலையிடுவதற்கு மற்றும் குறுக்கிடுவதற்கு முயற்சித்துள்ளார்கள் என்பதற்கான சான்றுகள் காணப்படுமிடத்து கட்சி அலுவலர்கள் மற்றும் பிரதிநிதிகளுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுத்தல்.

**சர்வதேச சமூகத்திற்கானது**

- இப்பிரசித்தமான வழக்குகள் மற்றும் ஏனைய பாரிய மனித உரிமை மீறல்கள் தொடர்பான நடவடிக்கைகளை சரியான நேரத்தில் மற்றும் வினைத்திறனான முறையில் மேற்கொள்வதற்கான மற்றும் சட்டவாட்சியினை பின்பற்றுவதற்கான தேவையினை அரசாங்கத்திற்கு எடுத்துக்கூறுதல்.
- அவசியமான கட்டமைப்புசார் மற்றும் சட்டவாக்கத் திருத்தங்களை அறிமுகப்படுத்துவதற்கு அரசாங்கத்தை ஊக்கப்படுத்தல் மற்றும் அவசியமான தொழிநுட்ப உதவி மற்றும் வளங்களை வழங்குதல்.
- சட்டத்திலுள்ள தாமதங்கள், சான்றுகளின் கௌரவத்தினைப் பாதுகாத்தல், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளின் பாதுகாப்பு, தடயவியல் மற்றும் வேறு விடயங்கள் தொடர்பாக அரசாங்கம், சட்டத்தரணிகள் மற்றும் சிவில் சமுதாயங்களுக்கு அவசியமான ஆதரவு மற்றும் தொழில்நுட்ப நிபுணத்துவத்தினை வழங்கல்.
- சர்வதேசத் தளத்தில் அரசாங்கத்தை நுணுக்கமாகக் கண்காணித்தல் மற்றும் சர்வதேச சட்ட கடப்பாடுகள் குறித்து அரசாங்கத்தினைப் பொறுப்புக்கூறச் செய்தல்.